**<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்.</u>**

**முன்னிலை: திரு. க.ஜெயக்குமார்.பி.எல்.,எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரியலூர்.**

*2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 06ஆம் நாள் திங்கள்கிழமை*
*திருவள்ளுவராண்டு 2050 ஸ்ரீ விகாரி வருடம் மார்கழி திங்கள் 21ம் நாள்*

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண். 1/2017</u>**

1.வீரசுந்தரபாண்டியன் .....மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்
2.ரவிசந்திரன்

/எதிர்/

1. பூராசாமி
2. பூங்கொடி
3.சார்பதிவாளர் ஆண்டிமடம் .....எதிர்மேல்முறையீட்டாளர்கள்/
4.*தேன்மொழி பிரதிவாதிகள்
*(I.A.28/18ல் தேதி 4.1.19 அன்று உத்தரவுப்படி திருத்தப்பட்டுள்ளது)
5* கோகிலா
(* IANo.2/19ல் 30.10.19 அன்று உத்தரவுப்படி திருத்தப்பட்டுள்ளது)

<u>சார்பு நீதிமன்றம், அரியலூர். அசல் வழக்கு எண்.157/2010-ல் 28.06.2016-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.</u>

விசாரணை நீதிமன்ற தரப்பினர்

1.வீரசுந்தரபாண்டியன் வாதிகள்
2.ரவிசந்திரன்

/எதிர்/

1. பூராசாமி
2. பூங்கொடி
3.சார்பதிவாளர் ஆண்டிமடம் .....பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடு இந்நீதிமன்றம் முன்பாக 20.12.2019-ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்

திரு.ஏ.செல்வராஜ்.,எம்.,ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஓ.வெங்கடாஜலபதி.,.பி.ஏ.,பி.எல்.,அவர்கள் ஆஜராகியும், 1,2ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜரிண்மையாலும், 4,5ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.முத்துக்குமரன்.,பி.ஏ.,பி.எல்.,அவர்கள் ஆஜராகியும், ஆஜராகியும், இரு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## <u>தீர்ப்புரை</u>

இம்மேல்முறையீடு சார்பு நீதிமன்றம், அரியலூர். அசல் வழக்கு எண்.157/2010-ல் 28.06.2016-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளால் இம்மேல்முறையீட்டினை அனுமதிக்கக்கோரி ஆர்டர் 41, ரூல் 1 பிரிவு 96 சி.பி.சியின் கீழ் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### <u>2.விசாரணை நீதிமன்றத்தின் முன் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-</u>

தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளின் கூட்டுக்குடும்ப சொத்து எனவும், கர்த்தா என்ற வகையில் முதல் பிரதிவாதியின் பெரியல் கிரயம் வாங்கப்பட்டது எனவும், வாதிகள் முதல் பிரதிவாதியின் முதல் தாரத்து மகன்கள் எனவும், 2ம் பிரதிவாதி 2ம் தாரத்து மகள் எனவும், முதல் பிரதிவாதி 2ம் வாதிக்கு 19.08.1992ல் ஒரு சாசனம் எழுதி வைத்ததாகவும், பிறகு 03.03.2009 அன்று 2ம் பிரதிவாதி பூங்கொடி பெயருக்கு ஒரு உயில் சாசனம் எழுதி வைத்ததாகவும், தற்போது 2ம் பிரதிவாதி பெயரில் கிரயம் அல்லது தான பத்திரம் எழுதி கொடுக்க முயற்சி செய்து வருவதாகவும், எனவே, இவ்வழக்கை தாக்கல் செய்ததாக கூறியுள்ளார்கள்.

### <u>3. முதல் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை 2ம் பிரதிவாதி அனுசரித்துக்கொண்டதன் சுருக்கம்:-</u>

மேற்படி சொத்துக்கள் முதல் பிரதிவாதி கிரயம் வாங்கிய போது வாதிகள் 1 மற்றும் 2ம்

பிரதிவாதி குழந்தைகள் எனவும், வாதிகளின் தாயாருக்கு எவ்வித சொத்தும் இல்லை எனவும், முதல் பிரதிவாதிக்கு பூர்வீக சொத்து இல்லை எனவும், ஆசிரியர் பணி செய்து மேற்படி தாவா சொத்துக்களை கிரயம் வாங்கியதாகவும், அவரது பூர்வீக சொத்தான கால் காணியை அவரது சகோதரர் குப்புசாமி அனுபவித்து வருவதாகவும், தாவ சொத்து அவரது தனிப்பட்ட சொத்து எனவும், அதில் வாதிகளுக்கு எவ்வித பாகமும் இல்லை எனவும், அனைவரும் தனித்தனியாக வசித்து வருவதாகவம், 2ம் வாதிக்கு எழுதி வைத்த உயில் சாசனத்தை ரத்து செய்து விட்டதாகவும், 2ம் பிரதிவாதிக்கு திருமண காலத்தில் எவ்வித சீர்வரிசையும் செய்யாததால் தன சுயார்ஜித சொத்துக்களை 18.05.2011 அன்று 2ம் பிரதிவாதியின் பெயருக்கு தான பத்திரம் எழுதி வைத்து விட்டதாகவும், சொத்தை ஒப்படைத்து விட்டதாகவும், அந்த பத்திரமும் அமுலுக்கு வந்து விட்டது எனவும், எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என வேண்டியுள்ளார்.

**4. 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

இப்பிரதிவாதி பதிவுத்துறை விதிகளுக்கு இணங்கவே செயல்பட்டு வருவதாகவும் இந்நீதிமன்ற உத்தரவுப்படி செயல்பட தயராக உள்ளதாகவும் எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறியுள்ளார்.

**5. வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம 27.08.2012 அன்று கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.**

1. தாவா சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்களா?
2. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுயர்ஜித தனிப்பட்ட சொத்துக்களா?
3. தாவாவில் வாதிகள் கோரும் 1/2 பாகம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதா?
4. அவசியமாக தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?
5. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

6. வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ.9 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில்

பி.வா.சா.1,2 சாட்சி விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1,2 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7. இந்நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்ட மேல்முறையீட்டின் சுருக்கம்;:-**

மேல்முறையீட்டாளர் தரப்பில் பிரதான வழக்கு பாகம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு என்றும், மேற்படி வழக்குரை சொத்துக்கள் பூராசாமியின் பூர்வீக சொத்துக்கள் என்றும், அதனை அவர் சாட்சியத்தில் ஒத்துக்கொண்டுள்ள நிலையிலும், விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது சட்டப்படி சடியானது அல்ல என்றும், எனவே, சார்பு நீதிமன்றம், அரியலூர். அசல் வழக்கு எண்.157/2010-ல் 28.06.2016-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள்/ வாதிகளால் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8). இந்த மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள்; (Points for consideration ) யாதெனில்?**

1.இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

2.இந்த மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் என்ன?

**9. இந்த மேல்முறையீடு சட்டப்படி அனுமதிக்கப்படவேண்டுமா இந்த மேல்முறையீட்டில் சொல்லப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்பட வேண்டுமா என்று ஆராய வேண்டியுள்ளது.**

10. மேல்முறையீட்டாளர் தரப்பில் பிரதான வழக்கு பாகம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு என்றும், மேற்படி வழக்குரை சொத்துக்கள் பூராசாமியின் பூர்வீக சொத்துக்கள் என்றும், அதனை அவர் சாட்சியத்தில் ஒத்துக்கொண்டுள்ள நிலையிலும், விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது சட்டப்படி சடியானது அல்ல என்றும், ஆகவே விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டு இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படவேண்டும் என்று வாதிடப்பட்டது.

11. 4,5 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்குரை சொத்து 1ம் பிரதிவாதியான பூராசாமிக்கு உரிமைப்பட்டு அவர் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்

கொடுத்துள்ளார் என்றும், 2ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட சொத்தினை அவர் தேன்மொழிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றும், கிரயம் சட்டப்படியானது என்றும், வழக்குரை சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்து என்றும். செட்டில்மென்ட் ஆவணம் நடைமுறைக்கு வந்த பின்பு கிரயம் செய்யப்பட்டது என்றும், இவ்வாறான நிலையில் விசாரணை நீதிமன்றம் இவற்றை எல்லாம் ஆராய்ந்து வாதிக்கு வழக்குரையில் கோரிய பாகம் கிடைக்கத்தக்கல்ல என்று விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தது என்றும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டப்படியானது என்பதால் மேற்படி தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று வாதிடப்பட்டது.

12. வாதிகள் வழக்குரை 1,2 பட்டிகை சொத்துக்களில் 1/2 பாகத்தை விளம்புகை செய்து பிரித்து தரக்கோரியும், முதல் நிலைத்தீர்ப்பாணை பிறப்பிக்ககோரி மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கில் பூராசாமி 1ம் பிரதிவாதியாகவும், அவருடைய மகள் 2ம் பிரதிவாதியாகவும், ஆண்டிமடம் சார்பு பதிவாளர் 3ம் பிரதிவாதியாக காட்டப்பட்டு வழக்கு நடைபெற்றுள்ளது. வழக்கில் முதலில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பூராசாமி தாவா சொத்துக்கள் தனது தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் பூர்வீக சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டவை அல்ல என்றும் தனக்கு கிடைத்த ககால் காணி பூர்வீக சொத்தை தனது அண்ணன் குப்புசாமி அனுபவித்து வருவதாகவும் கூறிவிட்டுகுறுக்கு விசாரணையின் போது தாவா சொத்துக்கள் புர்வீக சொத்திலிருந்த கிடைத்த வருமானத்தை கொண்டு கிரயம் வாங்கப்பட்டவை என்று தனது எதிர்வழக்குரைக்கு முற்றிலும் எதிராக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்ய சொத்துக்கள் என்பதால் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யாமல் வாதிகள் பாகம் கோர இயலாது என்றும், பூராசாமிக்கும், 2ம் வாதி பூங்கொடிக்கும் பாகம் வழங்க ஆட்சேபனை இல்லை என்று கூற முடியாது என்றும், இவ்வாறான நிலையில் விசாரணை நீதிமன்றம் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து வழக்கை தள்ளுபடி செய்துள்ளது.

**13. இந்த மேல்முறையீட்டைப் பொறுத்தளவில் அதிகளவிலான சொத்துக்களை 1ம் பிரதிவாதியான பூராசாமியின் சுய சம்பாத்ய சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்களா என்பதைப் பொறுத்து முதலில் ஆராயப்படுகிறது.**

வழக்குரை 1,2 பட்டிகை சொத்துக்களைப் பொறுத்து பாகம் கோரப்பட்டிருக்கிறது. 1வது பட்டிகை சொத்து என்பது சர்வே எண்.182/3A ஹெக் 1.0.31 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்ட பம்பு செட், தேக்கு மரங்கள் மற்றும் அதில் உள்ள ஆர்.எஸ்.பதி மரங்களும் கொண்டதாக காண முடிகிறது.

14. மேல்முறையீட்டாளர் தரப்பில் மேல்முறையீட்டில் பூராசாமி 26.01.2019 இறந்து விட்டார் என்பதால் அதனைத் தொடர்ந்து அவருடைய வாரிசாக அவரது மனைவி கோகிலா 5ம் எதிர்மேல்முறையீட்டாளராக இடைக்கால மனு எண்.2/19 தேதி.30.10.2019ம் தேதியன்று மேல்முறையீட்டில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேபோல் 2ம் பிரதிவாதி பூங்கொடியின் சொத்தை கிரயம் பெற்ற தேன்மொழி என்பவர் 4ம் எதிர்மேல்முறையீட்டாளராக இடைக்கால மனு எண்.28/18 தேதி.04.1.2019ம் தேதியன்று மேல்முறையீட்டில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த வழக்கைப் பொறுத்தளவில் இந்த வழக்கின் வாதிகள் இறந்து போன பூராசாமியின் மூத்த தாரத்து மகன்கள் என்பது பூங்கொடி தரப்பில் மறுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இந்த வழக்கின் பூராசாமி மகன்களான வாதிகளுக்கு உரிமை இல்லை என்று பி.வா.சா.2 பூங்கொடி மறுக்காத நிலையில் இந்த வழக்கில் பூராசாமி இறந்து விட்ட நிலையில் தற்போதைய மனைவி கோகிலா என்பவர் வாரிசாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வழக்கில் தீர்வு காணப்படுகிறது.

15. வழக்குரை சொத்துக்கள் வா.சா.ஆ.1,2,3 ஆகிய ஆவணங்கள் மூலம் தனது தந்தை கிரயம் பெற்ற சொத்து என்பது இருதரப்பிலும் ஒத்துக்கொள்ளப்படடிருக்கிறது. மேற்படி சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் தங்களுடைய வழக்குரை பாரா 4ல் தாவா சொத்துக்கள் வாதிகள், பிரதிவாதிகளின் கூட்டுக்குடும்ப சொத்து என்றும், தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சம்பளம், 1ம் வாதியின் சம்பளம், 2ம் வாதியின் விவசாய வருமானம், வாதிகளின் தாய்வீட்டு சொத்துக்களை விற்றதில் கிடைத்த பணம் ஆகியவற்றின் மூலம் கூட்டுக்குடும்ப கர்த்தா என்ற வகையில் 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெற்றதாக தங்களுடைய சாட்சியத்தில் தெரிவித்து இருக்கிறார்.

16. வா.சா.ஆ.1 என்பது 4.9.1968ம் தேதியிட்ட ஆவணமாக காண முடிகிறது. வா.சா.ஆ.2 என்பது 5.8.1969ம் தேதியிட்ட ஆவணமாக காண முடிகிறது. வா.சா.ஆ. 3 என்பது

18.11.1972ம் தேதியிட்ட ஆவணமாக காண முடிகிறது. மேற்படி 3 ஆவணமும் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணம். மேற்படி ஆவணத்தின் அனைத்திலும் இந்த 1ம் பிரதிவாதி பூராசாமி பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்களாக காண முடிகிறது. மேற்படி வழக்குரை சொத்துக்கள் 2வது அயிட்டத்தில் வீடு உள்ளதாக காண முடிகிறது. அந்த வீட்டு வரி ரசீது வா.சாஆ.4ஆகவும், தண்ணீர் வரி ரசீது வா.சா.ஆ.5ஆகவும் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. பட்டா எண். 182/3Aல் 1வது பட்டிகை சொத்திற்கு பூராசாமி மற்றும் திருநாவுக்கரசு ஆகிய இருவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆவணம் வாசா.ஆ.6ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் பின்னர்18.05.2011ல் இந்த பூராசாமி மகளான 2ம் பிரதிவாதி பூங்கொடிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமாக காண முடிகிறது. அந்த ஆவணத்தில் நான் 04.09.1968ல் சுயமாக கிரயம் பெற்ற சொத்து என்று அதில் காட்டியுள்ளார். அதில் 2 அயிட்ட சொத்து காட்டப்பட்டிருக்கிறது. முதல் சொத்தாக புல எண்.182/3A. ஹெக் 1.31.0 ஏர்ஸ் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. 2வது அயிட்ட சொத்தில் புல எண்.176/18ல் 0.15.0 ஏர்ஸ் காட்டப்பட்டிருக்கிறது. இந்த 2அயிட்ட சொத்துக்கள்தான் வழக்குரை சொத்துக்களாக காட்டப்பட்டிருக்கிறது. அந்த ஆவணத்தின் அடிப்படையில் காணும்போது இந்த வழக்குரை சொத்துக்கள் என்பது பூராசாமியின் சுய சம்பாத்திய சொத்தாக காண முடிகிறது.

17. வாதிகள் வழக்குரை சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றதன் அடிப்படையில் பாகம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கில் முதலில் பூராசாமி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அதில் வழக்கறிஞர் திரு.எம்.அருள்நந்தி அவர்களால் வக்காலத்து தாக்கல் செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி பூராசாமி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை அவரது மகளான பி.வா.சா.2 பூங்கொடி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்படி எதிர்வழக்குரையில் இந்த கிரய பத்திரம் என்பது 1968ல் எழுதப்பட்டுள்ளது என்றும். ஆவணம் எழுதப்படும்போது 1ம் வாதிக்கு 2ம் வாதிக்கும் அந்த காலக்கட்டத்தில் 1 வயது, 3வயது இருந்ததாகவும், இந்த 1ம் பிரதிவாதி படித்து அப்போது ஆசிரியர் பணிக்கு வந்து விட்டபடியால் பூர்வீகமாக இருந்த கால்காணி நிலத்தையும், பிரதிவாதியின் சகோதரர் குப்புசாமியே அனுபவித்து வருகிறார் என்றும். பூர்வீக சொத்தில் இந்த பிரதிவாதிக்கு எந்த வருமானமும் இல்லை என்றும், இது சுய சம்பாத்ய சொத்துக்கள் என்றும், அதன் அடிப்படையில் 18.05.2011 அன்று தான்

அனுபவித்து வந்ததாக தெரிவித்திருக்கிறார். ஆக வாதிகளுக்கு வழக்குரை சொத்துக்களில் எந்த பாகமும் கிடைக்கத்தக்கல்ல என்று தெரிவித்திருக்கிறார். அதன் பிறகு இந்த வழக்கு விசாரணைக்கு வந்துள்ள நிலையில் இந்த 1ம் பிரதிவாதி வாதிக்கு பாகம் கொடுக்கப்படவேண்டும் என்றும், தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் தன்னுடைய தனது முந்தைய நிலையை மாற்றி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

18. பூராசாமி வழக்கில் பி.வா.சா.2ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தன்னுடைய பிரதான வாக்குமூலததில் தனது மகன்கள் தாக்கல் செய்த பாக வழக்கில் தங்கள் மகன்களுக்கு பாகத்தில் உரிமையுள்ளது என்றும், பாக வழக்கில் கண்ட சொத்துக்களை நானும், எனது மகன்களும் இன்று வரை பாகம் பிரித்து கொள்ளால் பொதுவில்தான் அனுபவித்து வருகிறோம் என்றும், 1ம் இன சொத்தான புல எண;182/3Aல் ஹெக்டர்1.0.31 ஏர்ஸ் நிலம் எனது பெயரில் கிரயம் பெற்று இருந்தாலும் என் தலைமையிலான பொது குடும்பத்துக்காக கிரயம் பெறப்பட்டவை என்றும், மேற்படி நிலத்தை கிரயம் பெறுவதற்காக பூர்வீக சொத்தில் கிடைத்த சொத்தினை விற்பனை செய்து அதில் கிடைத்த தொகைகளை கொண்டும் எனது மனைவியான வாதிகளின் தாயார் ராஜகுமாாரிக்கு சொந்தமான நகைகளை விற்பனை செய்தும் 1ம் இன சொத்தை கிரையம் பெற்றதாக தெரிவித்திருக்கிறார்.

19. இந்த பூராசாமி வழக்கறிஞர் திரு.டி. செல்வம் என்பவர் மூலமாக விசாரணையில் ஆஜராகி அதன் அடிப்படையில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில் தாவா சொத்துக்களை மூன்று கிரயம் பத்திரங்கள் மூலம் கிரயம் பெற்றதாகவும், 2ம் வாதிக்கு எழுதி வைத்த உயிலில் 19.8.92ல் என்னுடைய மகனுக்கு உயில் எழுதி வைத்திருக்கிறேன் என்றும், 9.3.2009ல் உயில் ஆவணம் எழுதி பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், என் பெயரில் கிரையம் பெற்று என் அனுபவத்தில் இருந்து வரும் சொத்துக்கள் தான் உயில் ஆவணத்தில் கண்டிருக்கிறேன் என்றும், அந்த உயில் ஆவணத்தை பின்னிட்டு நான் ரத்து செய்துவிட்டேன் என்றும், என் மகளுக்கும், மனைவிக்கும் உயில்ஆவணம் எழுதி வைத்தேனா என்றால் ஞாபகம் இல்லை என்றும், பி.வா.சா.ஆ.1 எழுதிய ஒவ்வொரு பக்கத்திலும் நான் கையெழுத்து பதிவு செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் தெரியாது. நான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு போகவில்லை. பத்திர பதிவு அலுவலகத்தில் என்னை அடையாளம் காட்டி எழுதப்பட்டது

என்றால் சரியல்ல என்றும் தெரிவித்திருக்கிறார். அதுபோக மொத்தம் 3 முறை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறிப்பாக 25.03.2014 அன்று செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் வழக்குரையில் கண்ட சொத்துக்கள் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றும் நான் கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான் என்றும், எனக்கு இது தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து அதே தேதியில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் செட்டில்மெண்ட் ஆவணத்தில் கையொப்பம் போட்டேன் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார். 11.2.2014 அன்று வழக்கறிஞர் மூலம் கொடுத்த வக்காலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவேன் என்றும், 12.12.2010ல் தேதியிட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து ஆங்கிலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், 11.2.2014ம் தேதியட்ட பிரமாண பத்திரிக்கையில் கா. பூராசாமி என்றுள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், தன்னிடம் காண்பிக்கப்பட்ட 28.11.2011ம் தேதியிட்ட வக்காலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும் தெரிவித்திருக்கிறார்.

20. அடுத்ததாக அதே நபர் தனது குறுக்கு விசாரணையில் தான் 33 ஆண்டுகள் ஆசிரியர் பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றும் தெரிவித்திருக்கிறார். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்த பின்பு 2ம் பிரதிவாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் மனக்கசப்பு ஏற்பட்டு அதன் அடிப்படையில் அவரை அவரது கணவர் அடைத்து வைத்து இருந்ததாக கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு நீதிப்பேராண்மை மனு 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் பூராசாமியின் மகளை சட்டத்திற்கு புறம்பான வகையில் அடைத்து வைத்துள்ளதாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி பூங்கொடி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நிலையில் மேற்படி ஆட்கொணர்வு மனு முடித்து வைக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவு பி.வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 1,2 பிரதிவாதிகளுக்குடையே மனக் கசப்பு ஏற்பட்டு ஒருவருக்கொருவர் முரணாக சாட்சியம் அளித்து இருப்பதாக 2ம் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21. இதனிடையே 2ம் பிரதிவாதி பூங்கொடி பி.வா.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் வழக்கறிஞர் திரு.எம்.அருள்நந்தி மூலம் ஆஜராகி தாக்கல்

செய்த பிரமாண வாக்குமூலத்தில் வழக்குரை சொத்து தனது தகப்பனார் கிரயம் பெற்ற சொத்துகள் என்றும், வாதிகள் 1வயது, 3வயது இருக்கும்போது கிரயம் பெற்றது என்றும், தனது தகப்பனார் ஆசிரியர் பணி செய்து வந்தார் என்றும், பூர்வீக சொத்தில் இருந்து எந்தவித வருமனமும் கிடையாது என்றும், தனக்கு நகைகள் முறையாக செய்யவில்லை என்பதால் எனக்கு சொத்து முறையாக எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும், தற்போது சொத்துக்களை நான் கிரயம் கொடுத்துவிட்டேன் என்றும் தெரிவித்திருக்கிறார்.

22. அவர் குறுக்கு விசாரணையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்புதான் பிவா.சா.ஆ.1 பத்திரம் 2011ல் எழுதப்பட்டது என்றால் சரிதான் என்றும், என்னுடைய பெற்றோர்கள் வாதிகளுக்கு பாகம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் உண்டு என்றும், நான் பி.ஈ படித்திருக்கிறேன் என்றும், பி.வா.சா.1 ஆவணம் என் தகப்பனார் எழுதிக்கொடுத்தார் என்றும், ஆவணம் எழுதிய தேதியில் நான் சென்னையில் இருந்தேன் என்றும், தானா செட்டில்மெண்டில் கண்டுள்ள சொத்துக்களில் எனக்கு கொடுப்பதாக எந்த வித ஆவணமும் இல்லை. தான செட்டில்மெண்ட் ஆவணம் எனது சீர்வரிசைக்காக எழுதப்படவில்லை. சொத்துக்களை என் பெயரில் எழுதி வைப்பதாக திருமணஆன தேதியிலிருந்து சொல்லி வந்தார். என் சகோதரர்கள் அவர்களுக்கு சேரவேண்டிய சொத்தை சேர்த்து எனக்கு எழுதிவிடுவார்கள் என்று இந்த பாகபிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். கிரய பத்திரம் எழுதப்பட்ட நாளில் என் தகப்பனார் பதிவாளர் அலுவலகத்திற்கும், என் வீட்டிற்கும் வரவில்லை. கிரைய பத்திரத்தை என் வீட்டில் வைத்துதான் கையெழுத்து போட்டேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

23. அடுத்ததாக இந்த வழக்கைப் பொறுத்து வழக்கை தாக்கல் செய்த வாதி வா.சா.1 ஆக வீரசுந்தரபாண்டியன் சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது பிரமாண வாக்குமூலத்தில் சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால் தாங்கள் கூட்டாக அனுபவித்து வருவதாகவும் அதன் அடிப்படையில் தங்களுக்கு பாகம் பிரித்துத் தரக் கோரியிருக்கிறார்.

அவர் தனது குறுக்கு விசாரணையில் 1ம் பிரதிவாதி எனது தகப்பனார். நான் 1ம் பிரதிவாதிக்கு நான் தான் மூத்தமகன் எனக்கு 46 வயது என்றும், 2ம் வாதி என் சகோதரர்

என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து 1,2,3 ஆவணங்கள் கிரயம் பெற்ற சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும். தாவா சொத்துக்கள் 1ம்பிரதிவாதியின் பெயரில் தற்போது உள்ளது என்றால் சரிதான் என்றும், எனது தகப்பனார் சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்து விட்டார் என்றும். தற்போது தாவா சொத்துக்களை 2ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த கிரைய தாரார்கள் கிரயம் பெற்றவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல என்றும், எனது தகப்பனார் 1ம் பிரதிவாதி தான் கிரையத்தை முடித்து கிரையம் பெற்றவர்களையும் அனுபவிக்க விடாமல் தடுத்து வருகிறார் என்றால் சரியல்ல என்று சாட்சியத்தில் கூறியுள்ளார்.

24. பூராசாமியின் மனைவியும், 2ம் பிரதிவாதியின் தாயார் கோகிலா சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தில் பூங்கொடி தனக்கு ஒரே மகள் என்றும், அவர் பி.ஈ படித்துள்ளதாகவும், அவர் ஆண்டிமடம் கிராமத்தை சேர்ந்த முன்னால் அ.இஅ.தி.மு.க கட்சியின் முன்னால் சட்டமன்ற உறுப்பினரும், தற்போது தி.மு.கவின் முக்கிய பிரமுகருமான தில்லை காந்தி என்பவர் தனது மகன் தாமரைசெல்வன் என்பவருக்கு என் மகளை பெண் கேட்டு வந்தார். பெண் கேட்டு வந்த தில்லை காந்தியும், அவரை சார்ந்தவர்களும் தாமரைச்செல்வன் பெரிய படிப்பு படித்திருப்பதாக கூறிபொய் சொல்லி எனது மகளை திருமணம் செய்து கொள்ள பெண் கொடுக்கும்படியும் வலியுறுத்தி கேட்டனர். அதனை நம்பி நாங்கள் எனது மகளுக்கு 35 பவுன் நகைகளும் ரூ.3,00,000/- ரொக்கமும் வரதட்சணையாக கொடுத்தோம் என்றும். ரூ.60,000/-க்கு பண்ட பாத்திரங்கள் கொடுத்தும் திருமணம் செய்து கொடுத்தோம் என்றும். இந்நிலையில் என் மூத்த தாரத்து மகன்களே மோசடி செய்துவிட்டு எங்களுடைய சொத்துக்களை அபகரித்து கொள்ள தில்லை காந்தி திட்டம்போட்டு செயல்பட்டு வந்ததை தெரிந்து கொண்ட எனது மகன்களான இவ்வழக்கின் வாதிகள் என்னிடமும், எனது கணவரிடமும் முறையிட்டு தங்களுக்கு சேரவேண்டிய பாக வீத சொத்துக்களைபிரித்து கொடுக்கும்படி கேட்டு நானும், எனது கணவரும் பாகம் பிரித்துக் கொடுக்க தயரானோம். இதனை தெரிந்துக்கொண்ட தில்லைகாந்தி எங்கள் பகுதியில் பலரின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்தில் செயல்பட்டும் முக்கிய பிரமுகரான பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளரான வைத்தி என்கிற வைத்தியலிங்கம் என்பவருடன் சதி செய்து தற்போது தனது கணவரை கடத்தி சென்று எனது கணவருக்கு என்ன நடக்கின்றது என்ற தெரியாத நிலையில் வாதிகளுக்கு பாகமாக கிடைக்க வேண்டிய தாவா சொத்துக்களை

வாதிகளுக்கு கிடைத்துவிடக்கூடாது என்ற தீய நோக்கத்தில் எனது மகளான 2ம் பிரதிவாதி பெயரில் தானா செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்துவிட்டனர் என்றும், அது சட்டப்படியானது அல்ல என்றும் அதன் பிறகு என் சொத்தை 2ம் பிரதிவாதி வேறு நபருக்கு கிரயம் செய்து கொடுக்க நிர்பந்திக்கப்பட்டிருக்கிறார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

*25.* இந்த வழக்கைப் பொறுத்தளவில் வழக்குரை சொத்துக்கள் என்பது 1ம் பரதிவாதி 1968ல் கிரயம் வாங்கிய சொத்துக்கள். 2ம் பிரதிவாதி தரப்பில் அந்த சொத்துக்கள் கிரயம் வாங்கும்போது 1,2 வாதிகளுக்கு 1ம் வாதிக்கு 1வயது என்றும், 2ம் வாதிக்கு 3வயது என்றும் குறிபிடப்பட்டிருக்கிறது. இதனை மறுத்து வாதிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இதனிடைய வா.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் தனக்கு 46 வயது என்று கூறப்பட்டிருக்கிறது. 1ம் வாதி 2013ம் வருடம் சாட்சியம் அளித்துள்ளார். 2013ம் வருடத்தில் இருந்து அவ்வாறு தோராயமாக அவருடைய வயதை காணும்போது வழக்குரை சொத்துக்களை கிரயம் பெறும் காலமான 4.9.68ல் 1ம் வாதிக்கு 1 வயது இருப்பதாக வாய்ப்புள்ளதாக காண முடிகிறது. இளையவரான 2ம் வாதிக்கு 2வயது குறைவாக இருப்பதாக காணும் நிலையில், அவருடைய வழக்கில் பாரா 4ல் கூறுவது போல் வாதிகள் வருமானத்தில் கொண்டு வா.சா.ஆ.1,2,3 வழக்குரை சொத்துக்கள் வாங்கப்பட்டதாக காண முடியவில்லை. மேலும் இந்த வாதிகள் தரப்பில் மேலும் இந்த வாதிகள் தரப்பில் 2ம் வாதியின் விவசாய வருமானம், வாதிகளின் தாய்வீட்டு சொத்துக்களை விற்றதில் கிடைத்த பணம் ஆகியவற்றைக் கொண்டு வழக்குரை சொத்துக்கள் வாங்கியதாக சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

*26.* முதலாவதாக இந்த பூராசாமி தன்னுடைய வழக்குரையில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கல்ல என்றும். சொத்துக்கள் சுய சம்பாத்ய சொத்துக்கள் என்றும், தான் ஆசிரியர் பணி செய்து அதலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கிய சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தற்போது வேறு வழக்கறிஞர் மூலம் ஆஜராகி தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் வாதிகளுக்கு பாகம் கொடுக்க வேண்டும் என்றும், சொத்துக்கள் வாதிகளின் தாயார் நகைகளை விற்று கொடுத்த பணம் மூலமும், பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்டதாக கூறும் சாட்சியம் தற்போது சட்டப்படி

நிலைக்கத்தக்கல்ல என்று வாதிகளால் வாதிடப்பட்டது.

27. இதனை விசாரணை நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் அவ்வாறு பிரதிவாதி காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒரு எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது நிராகரிப்பற்கு எந்த நிலையையும் எடுத்து வைக்க முடியாது என்று விசாரணை நீதிமன்றத்தில் 2016 (1) MWN (Civil) 32 என்ற மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2016 (1) MWN (Civil) 32**

**CODE OF CIVIL PROCEDURE, 1908 ( 5 of 1908), Order 8, Rule 9 -Filing of additional written Statement – Contrary to orginial pleadings – Whether permissible – Suit for delivery and possession of Wakf property – Suit decreed by Trial Court – Decree set aside by Appellate Court and matter remanded for disposal afresh – Application by Revision Petitionerrs/Deffendants for filing of Additional Written Statement – Title of Plaintiff – Wakf denied in Additional Written Satement – Hoowever, Defendats admitting title of Plaintiff wakf in Orginial Written Statement – Application dismissed by Trial Court – Held, pleadings in Additional Written Statement cannot be contrary to stand taken in original Written Statement – Dismissal of Application by Trial Court, upheld – Revision dismissed**

மேற்படி தீர்ப்பில் ஒருவர் ஆர்டர் 8 ரூல் 9ன் கீழ் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள நிலையில் அந்தக் கூடுதல் எதிர்வழக்குரை முந்தைய எதிர்வழக்குரைக்கு எதிராக அமைந்து இருந்தால் அதனை ஏற்கக்கூடாது என்பதைப் பொறுத்து நமது மாண்புமிகு சென்னைஉயர் நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் **“Pleadings in Additional Written Statement cannot be contray to stand taken in orginal written Statement”** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முந்தைய வழக்கிற்கு மாறாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையின் விவரம் ஏற்கக்கூடாது என்று மேற்படி தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28. இந்நிலையில் இந்த 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் ஒரு நிலையிலும் தன்னுடைய சாட்சியத்தில் அதற்கு முரணான வேறு ஒரு நிலையிலும் குறிப்பிடப்பட்டுள்ள

நிலையில் 1ம் பிரதிவாதி பூராசாமிக்கும், அவருடைய மகளான 2ம் பிரதிவாதிக்கும் தொடக்கத்தில் நல்ல உறவு இருந்துள்ளதன் அடிப்படையில் வாதிகள் பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று கட்சி செய்தும், பின்னர் தனது மகளை கடத்தி வைத்துள்ளதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு பேராண்மை மனு தாக்கல் செய்து 2ம் பிரதிவாதி தன்னை யாரும் கடத்தவில்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் பின்னர் பூராசாமி தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டு 2ம் பிரதிவாதிக்கு எதிராக 1ம் பிரதிவாதி ஒரு நிலையை எடுத்ததாக காண முடிகிறது. ஆக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் காணும்போது பூராசாமி எதிர்வழக்குரையில் ஒரு நிலையையும், சாட்சியத்தில் ஒரு நிலையையும் எடுத்துள்ள நிலையில் எதிர்வழக்குரை என்பது முந்தைய ஒரு வாக்குமூலம் என்பதால் அதன் அடிப்படையில் காணும்போது முந்தைய சாட்சியம் தான் எடுத்துக்கொள்ள முடியும் என்று காண முடிகிறது.

29. இந்த வழக்கைப் பொறுத்தளவில் இந்த வழக்கின் வாதிகள் வழக்குரை சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், பூர்வீக சொத்துக்கள் இருந்து வந்த வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று வாதிகள் கூறும் நிலையில் வாதிகள் அதனை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். அவ்வாறு வாதிகள் நிரூபித்துள்ளார்களா என்பதைப் பொறுத்து காணும்போது 2ம் வாதி சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்திற்கு ஆதரவாக பூராசாமி மனைவி கோகிலா சாட்சியம் அளித்துள்ளார். வாதிக்கு ஆதரவாக கோகிலா சாட்சியம் அளித்திருந்தாலும் உரிமையியல் நீதிமன்றத்தில் வா.சா.ஆ.1,2 ஆவணங்களின் அடிப்படையில் வழக்குரை சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்ய சொத்துக்கள் என்றும், மேற்படி ஆவணங்கள் யாவும் 1968ம் வருடம் பெற்றதாக காணும் நிலையில் அந்த காலக்கட்டத்தில் வாதிகள் பங்களிப்பிற்கு வாய்ப்பு இல்லாததாக காணும் நிலையில், அந்த காலக்கட்டத்தில் வாதிகளுக்கு 1,3 வயதுஇருந்துள்ள நிலையில், வா.சா.ஆ.1,2,3 ஆவணத்தை தவிர பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை மறுத்து வேறு வகையான ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் முன்னலைப்படுத்தாத நிலையிலும், அதேபோல் வழக்குரை சொத்துக்களை வாங்குவதற்கு ராஜக்குமாரியான வாதிகளின் தாயார் சேமிப்பு பணம் மற்றும் நகை விற்று வாங்கப்பட்டதாக பூராசாமி தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தாலும், பூராசாமி அளித்த சாட்சியத்தை வைத்துக்கொண்டு வழக்குரை சொத்து வாங்கப்பட்டதாக முடிவு செய்ய இயலாது. ஏனெனில் பூராசாமி எதிர்வழக்குரையிலும்,

சாட்சியத்திலும் வேறு வேறு நிலையை எடுத்துள்ள நிலையில் எதிர் வழக்கில் சொல்லியுள்ள விவரத்தின் அடிப்படையில் காணும்போது இந்த வழக்கின் வாதிகள் வழக்குரை சொத்தானது பூர்வீக சொத்தின் வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பது நிரூபிக்கப்படவிலலை என்று காண முடிகிறது.

30. இதனைப் பொறுத்தும் எதிர்மேல்முறையீட்டாளரர் தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் ஒரு முன் தீர்ப்பு கோடிட்டு காட்டப்பட்டுள்ளது,

**2010 (1) MWN (Civil) 180**

**HINDU LAW – Joint Family Property – EVIDENCE ACT, 1872 ( 1of 1872), Sections 101 to 103 – Burden of proof – Appellant had proved that suit properties are his separate porperties – No evidence by respondent to prove that suit properties are joint family properties -There is no proof to show that properties have been blended with ancestral joint family properties and put in common hotchpot – Respondent has not discharged his burden – First Appellate Court erred in holding that appellant failed to prove his case – Impugned judgment set aside – Appeal allowed.**

மேற்படி வழக்கில் ஒரு கூட்டுக்குடும்பசொத்தில் இருந்து வந்த வருமானத்தைக் கொண்டு சொத்துக்கள் வாங்கப்பட்டதாக கூறும் நிலையில் அதனை முன்னிலைப்படுத்தும் வாதிகள் தான் அதனை நிரூபிக்க வேண்டும் என்றும். மேற்படி தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது.

31. ஆனால் இந்த வழக்கைப் பொறுத்தளவில் பி.வா.சா.ஆ1 என்பது ஒரு செட்டில்மென்ட் ஆவணமாக காணும் நிலையில், மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணமாக காணும் நிலையில் மேற்படி வா.சா.ஆ.1,2,3 ஆவணத்தின் அடிப்படையில் காணும்போது மேற்படி வழக்குரை சொத்துக்கள் என்பது பூராசாமி ஆசிரியர் பணி செய்து வந்து அதிலிருந்து வந்த வருமானமான சுய சம்பாத்ய வருமானத்தைக் கொண்டு கிரயம் பெற்ற சொத்தாக காணும் நிலையில், இந்த வழக்கின் வாதிகள் வழக்குரை சொத்துக்களில் பாகம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையில், ஆவணங்களின் அடிப்படையில் பூராசாமி சுய சம்பாத்ய சொத்தில் கிரயம் வாங்கிய சொத்து என்று காணும் நிலையில், பி.வா.சா.1 அளித்த சாட்சியத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக் கொடுக்கபட்டதாக காண

முடிகிறது. ஏனெனில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்பது பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணம் என்பதாலும், மேலும் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணமாக காணும் நிலையில், அந்த ஆவணம் மோசடியாக வேறு வகையில் வாங்கப்பட்டதாக காண முடியாத நிலையில், மேலும் பி.வா.சா.ஆ.1 என்பது மோசடியாக எழுதப்பட்டதாக வா.சா.2 சாட்சியம் அளித்து இருந்தாலும் அதனை ரத்து செய்ய பூராசாமி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில், பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி சொத்து தேன்மொழி என்பவருக்கு கிரயம் செய்யப்பட்டு விட்டதாக காணும் நிலையில், வழக்குரை சொத்துக்கள் 1ம் பரதிவாதியின் சுய சம்பாத்யத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதால் வாதிகளுக்கு வழக்குரையில் கோரிய பாகம் கிடைக்கத்தக்கல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.

32. வாதிகள் வழக்குரை சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றதன் அடிப்படையில் வழக்குகை தாக்கல் செய்து பாகம் கோரிய நிலையில் வழக்குரையில் சொத்துக்கள் பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் அல்ல என்றும், பூராசாமி ஆசிரியர் பணி செய்து வந்து அவருடைய வருமானத்தைக் கொண்டு கிரயம் பெற்ற சொத்தாக காணும் நிலையில், விசாரணை நீதிமன்றம் இவற்றை எல்லாம் ஆராய்ந்து அதன் அடிப்படையில் வழங்கிய தீர்ப்பு சட்டப்படி சரியானது என்றே காணும் நிலையில், இந்த வாதிகள் அளித்த சாட்சியத்திலும், பூராசாமி அளித்த சாட்சயத்திலும் இந்த 2ம் பிரதிவாதி கிரயம் கொடுத்த சொத்து மோசடியாக பெற்றதாக குறிப்பிட்டுள்ளனர். ஆனால் வாதி தாக்கல் செய்த வழக்கு பாகம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு என்பதால் அதன் அடிப்படையில் தீர்ப்பு பிறப்பிக்கமுடியும் என்றும், மற்ற பிரச்சனையைப் பொறுத்து நீதிமன்றம் எந்த உத்தரவும் பிறப்பிக்க இயலாது என்று காணும் நிலையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் சட்டப்படியும் பொருண்மைப்படியும் சரியானது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால்

தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2020-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6-ஆம் நாளன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்.திரு.க.ஜெயக்குமார்),
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.